*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 328/2021***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-8 (LW-12)***

*Name / Father's Name:* ***திருமதி.ராஜலட்சுமி க/பெ. ஆனந்தராஜா***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **14.07.2025.**

துவக்க நேரம் 01.10 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது பெரம்பலார் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.01.2021 அன்று இரவு 08.30 மணிக்கு நான் ஆத்துார் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபொழுது சின்னசேலத்தை சேர்ந்த லட்சுமணன் (30) என்பவர் சிகிச்சைக்கு வந்தார்.

2) லட்சுமணனை விசாரித்தேன். அவர் கடந்த 28.01.2021ம் தேதி மாலை 04.00 மணியளவில் அவரை அடையாளம் தெரிந்த 4 ஆண்கள், 3 பெண்கள் தன்னை கட்டையாலும், கல்லாலும் அவரது வீட்டில் வைத்து அடித்துவிட்டதாக சொன்னார்.

3) அவரை பரிசோதித்தேன். அவருக்கு பின்வரும் காயங்கள் காணப்பட்டன.

i) 3x1x1 cm அளவில் வலது காதின் அடிப்பகுதியில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

ii) 2x1 cm அளவில் இடதுமார்பில் அவருக்கு சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

iii) 2x1 cm அளவில் லட்சுமணனின் இடதுபக்க தலையில் கண்ணிய காயம் காணப்பட்டது.

4) மேற்படி காயத்திற்கு சிகிச்சைக்காக அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னிடம்

விசாரணை செய்தார்கள். லட்சுமணனுக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கினேன். **(லட்சுமணனின் விபத்து பதிவேட்டுடன்கூடிய காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5) கடந்த 28.01.2021ம் தேதி மாலை 04.00 மணியளவில் ஈஸ்வரன்(27) அவரை அடையாளம் தெரிந்த 4 ஆண்கள், 3 பெண்கள் தன்னை கட்டையாலும், கல்லாலும் அவரது வீட்டில் வைத்து அடித்துவிட்டதாக சொன்னார்.

6) அவரை பரிசோதித்தேன். அவருக்கு பின்வரும் காயங்கள் காணப்பட்டன.

i) 2x2 cm அளவில் இடதுபக்க முன்நெற்றியில் கண்ணியகாயம் காணப்பட்டது.

ii) 2x1 cm அளவில் ஈஸ்வரனின் மேல்உதட்டில் கண்ணியகாயம் காணப்பட்டது.

iii) 2x1 cm அளவில் அவரது இடதுபக்க காலிலி சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

iv) ஈஸ்வரனின் முதுகில் வலி இருந்ததும், வயிற்றில் இருபுறத்தின் மேல்பகுதியிலும் வலி இருந்ததும் கண்டறிப்பட்டது.

7) மேற்படி காயத்திற்கு சிகிச்சைக்காக அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னிடம் விசாரணை செய்தார்கள். ஈஸ்வரனுக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கினேன். **(ஈஸ்வரனின் விபத்து பதிவேட்டுடன்கூடிய காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) லட்சுமணன், என்னிடம் சம்பவம் நடந்த இடம் அவரது வீட்டில் என்று சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான். லட்சுமணனை, நான் பரிசோதித்தபொழுது அவருக்கு கழுத்தில் எந்த காயமும் இல்லை என்றால் சரிதான். ஈஸ்வரனும் சம்பவம் நடந்த இடம் தனது வீட்டில் என்றுதான் சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான்.

2) காயத்தின் நிறம் ஒருவருக்கு அடிபட்ட நேரத்தை பொறுத்து மாறுபடும் என்று சொன்னால் சரிதான். மேற்படி அடிபட்டதாக சொல்லும் இரண்டு நபர்களின்

காயத்தின் நிறங்கள் குறித்து மேற்படி இரண்டு நபர்களின் காயச்சான்றிதழ்களில் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். என்னை போலிசார் விசாரித்தபொழுது, என்னிடம் எந்தவிதமான ஆயுதங்களையும் போலிசார், என்னிடம் காண்பித்து, என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

3) மேற்படி இரண்டு நபர்களுக்கும் ஏற்பட்ட காயங்கள் அவர்கள் காயம்பட்டதாக சொன்ன நேரத்திற்கு இரண்டு மணிநேரத்திற்கு முன்பு ஏற்பட்டிருக்கக்கூட வாய்ப்புள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி இரண்டு நபர்களுக்கும் ஏற்பட்ட காயங்கள் மேடான பகுதியில் இருந்து கீழே விழும்பொழுதோ, இருசக்கர வாகனத்தில் சென்று கீழே விழும்பொழுதோ ஏற்பட வாய்ப்புள்ளது என்று சொன்னால் சரிதான்.

முடிவு நேரம் 01.31 A.N

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.07.14 19:36:31 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 328/2021***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-9 (LW-14)***

*Name / Father's Name:* ***திரு.கணேசன் த/பெ. சண்முகம்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **14.07.2025.**

துவக்க நேரம் 01.32 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்போது கருமந்துறை காவல் நிலையத்தில் காவல் உதவி பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு.வீரமுத்து மற்றும் வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திரு.மோகன்ராஜ் ஆகியோர்களுடன் நான் பணி செய்து வந்துள்ளேன், அவர்களின் கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சயம் ஆகும். மேலும் காவல் உதவி ஆய்வாளர் திரு.வீரமுத்து அவர்கள் இறந்ததாலும், வழக்கின் புலன்விசாரணை அதிகாரி ஓய்வுபெற்று பணியிடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாலும், வழக்கின் நலன் கருதி, ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 30.01.2021ம் தேதி மதியம் 02.00 மணியளவில், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.கோவிந்தராஜ் என்பவர் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த புகார்தாரர் ஈஸ்வரன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று வந்து, பொறுப்பு காவல் உதவி ஆய்வாளராக திரு.வீரமுத்து அவர்கள் கருமந்துறை காவல் நிலைய பொறுப்பிலிருந்தவரிடம் ஒப்படைத்துள்ளார். திரு.வீரமுத்து அவர்கள் மேற்படி புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது குற்ற

எண்.36/2021 சட்ட பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 427, 506(2), 379 of IPC ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

3) பின்னர் அசல் ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மேலும் வழக்காவணங்களை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு.மோகன்ராஜ் அவர்களிடம் ஒப்படைத்துள்ளார்.

4) பின்னர் காவல் ஆய்வாளர் திரு.மோகன்ராஜ் அவர்கள் 30.01.2021ம் தேதி மாலை 04.00 மணியளவில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு சாட்சிகள் ராஜாராமன் மற்றும் ரமேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி பார்வை மகஜர் சாட்சிகள் முன்னிலையில் சுமாராக அரைகிலோ எடைகொண்ட உடைந்த சிமெண்ட் அட்டையை கைப்பற்றுதல் மகஜரில் காவல் ஆய்வாளர் கைப்பற்றி, கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் 1 முதல் 9 வரையில் உள்ளவர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். கைப்பற்றிய உடைந்த சிமெண்ட் அட்டையை படிவம் 95ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

5) சம்பவம் முதற்கட்ட விசாரணையில் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரிகள் சடையன், வெங்கடேசன், லட்சுமணன் ஆகியோர்களை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். சாட்சிகளின் அடிப்படையில் மற்ற எதிரிகளான தேவராஜ், உன்னாயி, கம்சலா, சங்கீதா ஆகியோர்கள் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்ற தெரிந்து அவர்களை இவ்வழக்கிலிருந்து நீக்கி எதிரிகள் நீக்கல் அறிக்கையை இந்நீதிமனறத்தில் தாக்கல் செய்துள்ளார்.

6) காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்.திருமதி.ராஜலட்சுமி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயம்பட்டவர்களுக்கு காயச்சான்றிதழ்கள் பெற்றுள்ளார்.

7) இவ்வழக்கில் புகார் வாக்குமூலத்தை பெற்றுவந்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.கோவிந்தராஜ் என்பவரை விசாரித்து வாக்கமூலம் பதிவு செய்து, பின்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் சம்பவம் உண்மை எனத் தெரிய வந்ததால் புலன்விசாரணையை முடித்து வழக்கு பதிவு செய்த பிரிவுகளான 147, 148, 294(b), 323, 324, 427, 506(2), 379 இதசவிலிருந்து 294(b), 323, 324, 427, 506(1) இதசவாக சட்டப்பிரிவுகளை மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார்

செய்து, எதிரிகள் சடையன், வெங்கடேசன், லட்சுமணன் ஆகியோர்களுக்கு எதிராக காவல் ஆய்வாளர் திரு.மோகன்ராஜ் அவர்கள் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.6, பார்வை மகஜர் அ.த.சா.ஆ.7, மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.8, கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.9, படிவம் 95 அ.த.சா.ஆ.10, எதிரிகள் நீக்கல் அறிக்கை அ.த.சா.ஆ.11, சட்டப்பிரிவுகள் மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.12, உடைந்த சிமெண்ட் அட்டை அ.த.சா.பொ.1 ஆகும்.**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) இவ்வழக்கு குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும், நான் ஆவணங்களின் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரிதான். புகார்தாரர் ஈஸ்வரன், லட்சுமணன், கோவிந்தன் ஆகியோர்கள், எதிரிகளை அடித்துவிட்டதாக அவர்கள் மீது இதே சம்பவம் தொடர்பாக எதிரிகள் கொடுத்த புகாரின் பேரில் இந்நீதிமன்றத்தில் CC.No.214/2021 வழக்கு நடந்துவருகிறது என்று சொன்னால் சரிதான்.

2) மாதிரி வரைபடத்தில், வீட்டின் ஓடுகள் உடைந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். பார்வை மஜரிலும் வீட்டின் ஓடு உடைந்திருந்ததாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். புகார்தாரர் தன்னுடைய புகாரில் தனது வீட்டின் ஓட்டை உடைத்ததாக சொல்லியுள்ள நிலையில், வீட்டின் எந்த பகுதியில் (முன்பகுதியிலா அல்லது பின்பகுதியிலா) உள்ள ஓட்டை உடைத்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

3) புகார்தாரர், எதிரிகள் தன்னை திட்டியதாக சொல்லியுள்ள நிலையில், எதிரிகள் திட்டிய வார்த்தைகளால் பொதுமக்கள் முன்பு தனக்கு அசிங்கம் ஏற்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிகள், புகார்தாரருக்கு விடுத்த கொலைமிரட்டலால், புகார்தாரருக்கு உயிர்பயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

4) காவல் நிலையாணையின்படி, ஒரே சம்பவத்திற்கு இரண்டு தரப்பிலும் புகார் கொடுக்கும் பட்சத்தில், அந்த சம்பவம் உண்மையில் யாரால் நடந்தது என்று விசாரித்து ஒரு வழக்குதான் பதிவு செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல, வழக்கினை விசாரித்து அதன் தன்மைக்கேற்ப இரண்டு வழக்குகள் பதிவு செய்யலாம்.

5) ஒரே சம்பவத்திற்கு இரண்டு வழக்குகள் பதிவு செய்யவேண்டிய சூழல் ஏற்பட்டால், மாவட்ட அரசு குற்றத்துறை வழக்கறிஞரிடம் கருத்துரை பெற்று வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல, குற்றத்தின் தன்மைக்கேற்ப வழக்கு பதிவு செய்வோம்.

6) ஒரே சம்பவம் தொடர்பாக இருபுகார்கள் வரும்நிலையில், அந்த இரண்டு புகார்களின் அடிப்படையிலும் வழக்கு பதிவு செய்யக்கூடாது என்றாலும், சரிவர விசாரணை செய்து உண்மையான புகாரின் அடிப்படையில் ஒரு வழக்கு மட்டும் பதிவு செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

7) புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் இடையே சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, விசாரணையிலும் தெரிந்துகொள்ளவில்லை. இவ்வழக்கினை விசாரணை செய்த புலன் விசாரணை செய்த புலன் விசாரணை அதிகாரி, சம்பவ இடத்திற்கு செல்லாமல், சரிவர புலன் விசாரணை செய்யாமல், காவல் நிலையத்தில் வைத்து அனைத்து ஆவணங்களையும் தயார் செய்து, எதிரிகளுக்கெதிராக குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் சான்றுபொருள் சாதாரணமாக கிடைக்கக்கூடியது என்ற நிலையில், இவ்வழக்கிற்கு சம்மந்தமில்லாத இடத்திலிருந்து சான்றுபொருளை பெற்று இவ்வழக்கு சான்றுபொருளாக குறியீடு செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 02.10 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.07.14 19:36:39 +0530

Judicial Magistrate No.2, Attur.